DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.330/2023

**prosecution witness: Lw13 as PW-9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜீவரத்தினம் | பதவி | : | காவல் ஆய்வாளர் |
| க/பெ. | : | சுடலைமணி | வயது | : | 55 |
| ஊர் | : | K.கைலாசபுரம், தூத்துக்குடி மாவட்டம் | சமயம் | : | இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>27.01.2026</u>

(எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

**<u>முதல் விசாரணை:-</u>**

1. நான் தற்போது காவல் ஆய்வாளராக ஏர்வாடி காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.06.2023ம் தேதி நான் மண்டபம் வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.வேலு என்பவர் பதிவு செய்து வைத்திருந்த மண்டபம் காவல் நிலைய குற்ற எண்.90/2023, பிரிவு. 279, 337 இதச வழக்கு கோப்பை அப்போதைய சார்பு ஆய்வாளர் திரு.கனிராஜ் என்பவர் முதல் விசாரணை மேற்கொண்டு வழக்கின் சாட்சிகளை விசாரித்து வழக்கின் சட்டப்பிரிவை 279, 337 இதசவிலிருந்து பிரிவுகள். 279, 337, 304(A) இதச ஆக மாற்றம் செய்து 05.06.2023ம் தேதி எனது பார்வைக்கு வைத்திருந்த வழக்கு கோப்பினை நான் பார்வையிட்டு சாட்சிகள் பழனிச்சாமி, ராஜசேகர், லதா ஆகியோர்களை விசாரணை செய்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2. பின்பு 05.06.2023ம் தேதி பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் மதுரை இராஜாஜி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வைத்து வாகன விபத்தில் இறந்த சந்திரசேகர், வயது 31/2023, த/பெ.பழனிச்சாமி என்பவரின் என்பவரின் இறந்த உடல் மீது காலை 11.45 முதல் 12.45 மணி வரை பிரேத விசாரணை முடித்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு பிரேத பரிசோதனை அலுவலுக்கு வேண்டுதல் கடிதத்துடன் மண்டபம் காவல் நிலைய த.கா.1745 திரு.சரவணக்குமார் என்பவர் வசம் ஒப்படைத்தேன்.

3. பின்பு 05.06.2023ம் தேதி இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.வேலு, முதல்விசாரணை மேற்கொண்ட சார்பு

ஆய்வாளர் திரு.கனிராஜ் மற்றும் பிரேத விசாரணை அலுவலுக்கு நியமிக்கப்பட்ட த.கா.1745 திரு.சரவணக்குமார் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. பின்பு 24.06.2023ம் தேதி 13.15 மணிக்கு இவ்வழக்கின் எதிரி ஆரோக்கிய பிரசாத், த/பெ.லூர்துசாமி என்பவரை மண்டபம் காவல் நிலையம் முன்பு வைத்து கைது செய்து தக்க இரு நபர் பிணையில் நிலையப் பிணையில் விடுவித்தேன்.

5. பின்பு 26.06.2023ம் தேதி இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய TN 65 AR 0372 என்ற எண்ணுள்ள Honda இருசக்கர வாகனத்தையும், பின்பு அதே தேதியில் barking light உடன் நின்ற TN 65 F 6669 என்ற எண் கொண்ட Ashok leylond வாகனத்தையும் மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தினேன். இந்நிலையில் ஆய்வாளர் பணிமாறுதலில் சென்றுவிட்டதால் வழக்கு கோப்பை ஆய்வாளர் சரிதாபானு வசம் ஒப்படைத்தேன்.

<u>எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்குகோப்பை எப்போது விசாரணைக்கு எடுத்துக் கொண்டீர்கள் என்றால் 05.06.2023ம் தேதி. சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. சார்பு ஆய்வாளர் கனிராஜ்தான் தாக்கல் செய்துள்ளார். எந்த தேதியில் தாக்கல் செய்துள்ளார் என்றால் 05.06.2023ம் தேதி. சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நான் பார்த்துள்ளேனா என்றால் 04.06.2023ம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் தவறுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளது. படித்து பார்த்துள்ளேன். மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையில் லாரியை முந்திக்கொண்டு செல்லும்போது விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. எனது புலன்விசாரணையின்படி நின்றுகொண்டிருந்த லாரியின் மீது இருசக்கரவாகனம் மோதியதாகத்தான் வழக்கு என்றால் சரிதான். சம்பவ இடம் லாரி நிறுத்துவதற்கான இடம் ஏதும் இல்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கும் தேசிய நெடுஞ்சாலை ரோட்டின் தெற்குப்புறம் பள்ளம் நீர்பிடிப்பு பகுதி என்றால் சரிதான். அந்த லாரி ஓட்டுநர் சங்குமணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தீர்களா என்றால் நான் பதிவு செய்யவில்லை சார்பு ஆய்வாளர் பதிவு செய்தார். அவர் சார்பு ஆய்வாளரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் நிறுத்தியிருந்த வண்டியை ரைட் சைடு எடுத்து செல்ல முயற்சித்தபோது விபத்து ஏற்பட்டதாக வாக்குமூலம் கொடுத்துள்ளாரா என்றால் எனக்கு பின்னர் வந்த ஆய்வாளரிடம் வாக்குமூலம் கொடுத்துள்ளார். அதனால் அது பற்றிய விபரம் எனக்கு தெரியாது. அந்த லாரியில் எத்தனை லோடுமேன்கள் வந்தார்கள் என்றாலும் அவர்களிடம் ஏதாவது வாக்குமூலம்

பதிவு செய்தேனா என்றாலும் இல்லை. இந்த வழக்கில் இறந்த சந்திரசேகரன்தான் இந்த வழக்கின் புகார்தாரர் என்றால் சரிதான்.

3. புகார் எப்போது பெறப்பட்டுள்ளது என்றால் 03.06.2023 ம் தேதி இரவு 7.00 மணிக்கு பெறப்பட்டது. இந்த வழக்கின் புகார்தாரர் எப்போது இறந்தார் என்றால் 04.06.2023 ம் தேதி 15.00 மணிக்கு இறந்துவிட்டார். காயம்பட்ட தினம் முதல் இறக்கும்வரை அவர் ஐ.சி.யு. வார்ட்டில் சிகிச்சையில் இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எழுதாத வெள்ளைப் பேப்பரில் கையொப்பம் மட்டும் வாங்கிக்கொண்டு பின்னிட்டு சார்பு ஆய்வாளர் வழக்கிற்கு தோதாக உண்மையான எதிரியை காப்பாற்றும் நோக்கில் புகாரை எழுதிக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் உண்மையான எதிரி லாரி ஓட்டுநர் சண்முகம்தான் என்றாலும் அவரை கைது செய்யவில்லை என்றும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. மருத்துவர் வழங்கிய போஸ்ட்மார்ட்டம் சர்டிபிகேட்டில் இறந்த நபர் 12 மணிநேரத்தில் இருந்து 24 மணிநேரத்திற்குள் இறந்திருக்க வாய்ப்புள்ளதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். போஸ்ட்மார்ட்டம் சர்டிபிகேட் 05.06.2023 ம் தேதியே வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். உண்மையான எதிரியை காப்பாற்றுவதற்காக இறந்த நபரிடம் புகார் பெற்றதாக கூறி உதவி செய்த இவ்வழக்கின் எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4. அரசுதரப்பு வழக்குப்படி எதிரி இறந்த நபர் அவரிடம் லிப்ட் கேட்டு பைக்கில் வந்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். முறையாக இந்த வழக்கின் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் எதிரியை சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு முதல் காரணம் சங்குமணியின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதைதான் காரணம் என்றால் அவருடைய கவனக்குறைவும் ஒரு காரணம் எதிரியின் கவனக்குறைவும் ஒரு காரணம். இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.01.27 10:27:33 +0530